2019 ஜனவரி 8]

அவைக்குத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். எனவே, இதுபோன்ற சிரமம் இருக்கும்பட்சத்தில், நிச்சயமாக துறை ரீதியாக ஆய்வு செய்யப்பட்டு, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கை கவனத்தில் எடுத்துச் செயல்படுத்தப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 34, மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. பலராமன், மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

34—

துணை மின் நிலையம்

***7253–திரு. ப. பலராமன்:**

மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பொன்னேரி தொகுதி, ஆரணி பேரூராட்சி, அகரம் கிராமத்தில் 33/11 KV துணை மின் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிய பொன்னேரி தொகுதி, ஆரணி பேரூராட்சியில் 33/11 KV துணை மின் நிலையம் அமைக்கப்பட்டு வருகின்றது. மார்ச் மாதக் கடைசிக்குள் அந்தத் துணை மின் நிலையம் பயன்பாட்டிற்கு வரும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10–30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. பலராமன் அவர்கள்.*

திரு. ப. பலராமன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். அவையின் மாண்பிற்கும், மரபிற்கும் சிறிதும் சேதாரம் ஏற்படாமல், நேர்மையோடும், நெறியோடும் பேரவையை நடத்திச் செல்லும் மேன்மைக்குரிய மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்குப் பணிவான வணக்கம்.*

மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் நல்லரசை நடத்திவரும் மாண்புமிகு முதல்வர் அருமை அண்ணன் எடப்பாடியார் அவர்களை இன்று நாடே போற்றுகிறது. (மேசையைத் தட்டும் ஒலி) நாள் முழுவதும் உழைத்தாலும், இருநூறு ரூபாயை முழுமையாகப் பார்க்க முடியாத ஏழைகளுக்கு பொங்கல் பரிசுடன் முழுவதுமாக இரண்டு ஐநூறு ரூபாய் தாள்களைத் தந்து, அவர்கள் மனதிலே மகிழ்ச்சியைப் பொங்கச் செய்த மக்களின் முதல்வர் மாண்புமிகு அண்ணன் அவர்களை வணங்கி, நன்றி பாராட்டுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) ஆட்சிக்கும், கட்சிக்கும் உறுதுணையாக இருந்து, அம்மாவின் வழி தொடர உதவிடும் அருமை அண்ணன் மாண்புமிகு துணை முதல்வர் ஓ.பி.எஸ். அவர்களையும் வணங்குகிறேன்.

பொன்னேரி தொகுதி மக்களின் கோரிக்கையை ஏற்று, ஆரணி பேரூராட்சிப் பகுதியில் துணை மின் நிலையம் அமைத்துக் கொடுத்த மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர், ஆற்றல் மறவர், அருமை அண்ணன் மாண்புமிகு திரு. தங்கமணி அவர்களுக்கும் என் தொகுதி மக்களின் சார்பில் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ‘கஜா’ புயலின் தாக்கத்தால் இரவில் தவித்த டெல்டா மாவட்ட மக்களின் இல்லங்களிலும், அவர்கள்தம் உள்ளங்களிலும் ஒளியேற்றிவைத்த மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர், ஆற்றல்மிகு அண்ணன் திரு. தங்கமணி அவர்களுக்கும், மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளில் முழுவீச்சில் ஈடுபட்ட மாண்புமிகு முதல்வர், மாண்புமிகு துணை முதல்வர் உள்ளிட்ட அமைச்சர் பெருமக்களுக்கும், இந்த அவையில் தனியாக ஒரு பாராட்டுத் தீர்மானமே கொண்டு வரலாம். (மேசையைத் தட்டும் ஒலி) அந்த அளவிற்கு நாடும், நல்லோரும், பலரும் பாராட்டுகின்ற வகையில் இரவு பகல் பாராமல் களப்பணி ஆற்றியுள்ளனர். குறிப்பாக, பல நூற்றுக்கணக்கான அலுவலர்களையும், பல ஆயிரக்கணக்கான பணியாளர்களையும் களமிறக்கி, புயல் வேகத்தில் பணியாற்றி மின் விநியோகத்தைச் சீரமைத்துத் தந்த மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர், போற்றுதலுக்குரிய அண்ணன் அவர்களை எவ்வளவு பாராட்டினாலும் தகும். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உறுப்பினர் கேள்விதான் கேட்கிறார்.

2019 ஜனவரி 8]

திரு. ப. பலராமன்: *பொன்னேரி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட ஆரணி பேரூராட்சியிலுள்ள மக்கள் பயன்பெறும் வகையில், 33/11* KV *திறனுடைய துணை மின் நிலையத்திற்கான கட்டுமானப் பணிகள் முடியும் தருவாயில் உள்ளன என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், பொன்னேரி தொகுதியில், பொன்னேரி பேரூராட்சிக்கு, 110/33/11* KV *துணை மின் நிலையம் அமைக்க மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் முன்வருவாரா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே உறுப்பினருடைய தொகுதியில் 12 துணை மின் நிலையங்கள் இருக்கின்றன. இப்பொழுது மின்னழுத்தத்தின் காரணமாக புதியதாக ஒரு 33/11* KV *துணை மின் நிலையம் அமைக்கப்பட்டு வருகின்றது. எதிர்காலத்தில் மின் தேவை அதிகமாக இருப்பின், பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. பலராமன் அவர்கள்.*

திரு. ப. பலராமன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது பொன்னேரி தொகுதி மிகவும் பின்தங்கிய தொகுதி. பொன்னேரி தொகுதியிலுள்ள மக்களின் நலன் கருதி, பொன்னேரி பேரூராட்சி மற்றும் அதைச் சுற்றியுள்ள ஐந்து பஞ்சாயத்துகளில், சுமார் ஒரு இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில், 33/11* KV *திறனுள்ள பொன்னேரி துணை மின் நிலையத்தினை 110/33/11* KV *திறன் கொண்டதாகத் தரம் உயர்த்திட வேண்டுமென்று சென்ற கூட்டத்தொடரில் கேட்டுக்கொள்ளப்பட்டது. தற்போது அதற்குண்டான இடவசதியும் உள்ளதால் மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள், கனிவோடு பரிசீலித்து, அதை மிக விரைவில் செய்து கொடுத்தால், என்னுடைய தொகுதி மக்களுக்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொண்டு, நன்றியுடன் அமர்கிறேன். நன்றி, வணக்கம்.* (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நன்றி சொல்லிவிட்டார், போதும். மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.கே. சேகர்பாபு அவர்கள்.*

திரு. பி.கே. சேகர்பாபு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே, 12–7–2017 அன்று, இதே அவையில், 33/11 KV திறன்கொண்ட ஒரு துணை மின் நிலையத்தை பி.வி. ஐயர் கோவில் தெரு, Anderson Street பகுதிகளில் அமைக்க வேண்டுமென்று நான் கோரிக்கை வைத்திருந்தேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உடனடியாகப் பரிசீலிக்கப்படும் என்றார். மாதங்கள் பதினெட்டு உருண்டோடிவிட்டன. ஏற்கெனவே, பன்னிரெண்டாவது சட்டமன்றப் பேரவையிலே நிறைவேற்றப்பட்டு, G.O.மூலம் உறுதியான அந்த இடம், காவல் துறைக்குச் சொந்தமான இடம் என்பதால், காவல் துறைக்கு வண்ணாரப்பேட்டை பகுதியிலே மாற்றாக ஒரு இடத்தை ஒதுக்கீடு செய்வதற்கு மின்சார வாரியம் தயாராக இருக்கின்றது. ஆகவே, இந்த இட மாற்றத்தை விரைவாகச் செயல்படுத்தி, தம்பு செட்டித் தெரு பகுதியிலே இருக்கின்ற துணை மின் நிலையத்தில் அதிகமான மின்னழுத்தம் இருக்கின்ற காரணத்தால், துணை மின் நிலையம் அவசியம் அங்கு தேவைப்படுவதால், உடனடியாக அமைச்சர் அவர்கள் அதை அமைக்க முன்வருவாரா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாகக் கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

முற்பகல் 10–35

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கை நியாயமான கோரிக்கைதான். ஆனால், அவர் கேட்ட கேள்விக்கு அவரே பதில் சொல்லிவிட்டார். காவல் துறைக்குச் சொந்தமான இடத்தை மின்சார வாரியம் எடுத்துக்கொண்டு, மின்சார வாரியத்திற்குச் சொந்தமான இடத்தைக் காவல் துறைக்குக் கொடுக்க வேண்டியுள்ளது. அந்த இடப் பரிமாற்றம் செய்யும் நேர்வில், இடத்தினுடைய நில மதிப்பு அதிகமாக இருக்கின்ற காரணத்தினால், அதிகாரிகள் மறுப்பு தெரிவித்துக்கொண்டிருக்கிறார்கள். இருந்தாலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லியிருக்கின்றார். நான் அதைத் தொடர்ந்து கண்காணித்துக் கொண்டிருக்கின்றேன். கூடிய விரைவில் அந்த இடமாற்றம் வந்தவுடன், அங்கே துணை மின் நிலையம் அமைப்பதற்கு விரைந்து நடவடிக்கை எடுக்கின்றேன் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.